(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 443.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 மார்ச்சு 19, வியாழக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4323/ ’13

1.

கௌரவ புத்திக பதிரண,— சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மொல்லிக்குளம் – சிலாவத்துறை வீதியை நிர்மாணிப்பதற்குத் தேவையான சரளைக் கற்களைப் பெற்றுக்கொள்வதற்காக வில்பத்து தேசிய வனப் பூங்காவின் 4ஆம் இலக்க வலயத்திற்குரிய பொரளுவல பிரதேசத்தில் பாரியளவில் சரளைக் கல் அகழ்வு நடைபெறுகின்றதென்பதையும்;

(ii) தந்திரிமலை வன சீவராசிகள் வீச்சிடை அலுவலகத்தின் வீச்சிடை வன பாதுகாப்பு உத்தியோகத்தரின் அனுசரணை இதற்கு கிடைப்பதாக பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 1937ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 3,5,6 ஆம் பிரிவுகள் அனைத்தும் மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயலின் காரணமாக மீறப்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், மாக பொறியியல் தனியார் கம்பனிக்கு மேற்படி பிரதேசத்தில் சரளைக் கற்களை அகழ்வதற்கான சிபாரிசை வழங்கியவர் யார்;

(iii) வில்லுபத்து தேசிய வனப் பூங்காவில் நடைபெறும், சுற்றாடலுக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும் மேற்படி செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4789/ ’14

2.

கௌரவ அசோக் அபேசிங்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நிறுவப்பட்டுள்ள கலாசார நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) குருநாகல் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள கலாச்சார நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) கலாச்சார நிலையங்களை நிறுவுவதற்கான முறையியல் யாதென்பதையும்;

(iv) கலாச்சார நிலையங்களுக்கு பொறுப்பான அலுவலர்களுக்கு செலுத்தப்படும் கொடுப்பனவு எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கொடுப்பனவை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5337/ ' 14

3\.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு (இபோச) உரித்தாயிருந்த சேவைக்கு பொருத்தமாயிருந்த மொத்த பேரூந்துகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஆண்டில் சேவைக்கு பொருத்தமற்றதென சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள இபோச பேரூந்துகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இபோசவின் பெயரில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தனியார் பேரூந்துகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பேரூந்துகள் ஈடுபடுத்தப்பட்டுள்ள பயண முடிவிடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பேருந்துகளை இபோசவில் சேர்த்துக்கொள்வதற்கு பின்பற்றப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iv) மேற்படி பேரூந்துகள் மூலம் இ.போ.ச. வுக்கு வருமானம் ஈட்டிக்கொள்ளப்படும் விதம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5690/ '14

4\.

கௌரவ அனுர திஸாநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஓகத்து மாதம் வரையான காலப்பகுதிக்குள் பெல்வத்த மற்றும் செவனகல சீனிக் கம்பனிகளால் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த எத்தனோலின் அளவு வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேற்படி எத்தனோலில் மதுபான உற்பத்திக்காகவும் நறுமணப்பொருட்கள் உற்பத்திக்காகவும் ஈடுபடுத்தப்பட்ட அளவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மதுபானம் மற்றும் நறுமணப்பொருட்கள் உற்பத்திக்காக ஒரு லீற்றருக்கு அறவிடப்படுகின்ற வரித் தொகை யாது;

(iv) மேற்படி எத்தனோலைப் பெற்றுக்கொண்ட மதுபான உற்பத்திக் கம்பனிகள் மற்றும் நறுமணப்பொருள் உற்பத்திக் கம்பனிகளின் பெயர்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5708/ '14

5\.

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 தயட்ட கிருள நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக 2011 ஜன செவன பத்து இலட்சம் வீடுகள் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு நடவடிக்கையின் கீழ் மொனறாகலை மாவட்டத்தினுள் வீடமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இனங்காணப்பட்ட மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் வீடமைப்பு வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி திட்டத்திற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) குறிப்பிட்ட பணத்தொகை பெறப்பட்ட முறையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஜன செவன பத்து இலட்சம் வீடுகள் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு நடவடிக்கையின் கீழ் வீடமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு இனங்காணப்பட்ட குடும்பங்களுக்கு எழுத்துமூல வாக்குறுதியொன்று வழங்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) குறிப்பிட்ட வாக்குறுதியின்படி இற்றைவரை வீடுகள் கிடைக்காதுள்ள குடும்பங்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5845/ '14

6.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு மாநகரசபை ஆளுகைப் பிரதேசத்தில், இலக்கம் 32, குப்பியாவத்தை மேற்கு பிரிவுக்குரிய, ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல மாவத்தையில், ஆதனவரி இலக்கம் 108 மற்றும் 108/20 ஆகிய இடங்களின் புகுமுக வழிகளுக்கு தடையேற்படும் விதத்தில், நகர பொது மலசலகூடத் தொகுதியின் மீது அத்துமீறிய நிர்மாணிப்பொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) கொழும்பு மாநகர சபையின் ஒரு சில உத்தியோகத்தர்களின் அனுசரணையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட மேற்படி அத்துமீறிய நிர்மாணிப்பு காரணமாக பொது மலசலகூடத் தொகுதி தனியார் சொத்தொன்றாக மாறியுள்ளதால், மேற்படி நிர்மாணிப்பை தாமதமின்றி அகற்ற நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5862/ '15

7.

கௌரவ சாந்த பண்டார,— நெடுஞ்சாலைகள், உயர் கல்வி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதிக் கட்டமைப்பில் காணப்படும் வளர்ச்சியானது எமது நாட்டின் அபிவிருத்திக்குச் செல்வாக்குச் செலுத்தும் பிரதானமானதொரு காரணி என்பதையும்;

(ii) கடந்த சில வருடங்களில் இந்நாட்டில் பல வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைபெற்றுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இன்றளவில் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5875/ '15

8.

கௌரவ லலித் திசாநாயக்க,— மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமை மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலின் பின்னர் நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் பிரிவுகளிலிருந்தும் அறிக்கையிடப்பட்டுள்ள அரசியல் வன்முறைச் செயல்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வன்முறைச் செயல்களால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட அரசியல் வன்முறைச் சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகளில் வீடுகள் தீயிட்டு எரிக்கப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4473/ '13

9.

கௌரவ புத்திக பதிரண,— பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மாத்தறை உயன்வத்த விளையாட்டு மைதானம், மாவட்ட மற்றும் அகில இலங்கை மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளை நடாத்தப் பயன்படுத்தப்படும் பொது விளையாட்டு மைதானம் என்பதையும்;

(ii) மாத்தறை நகரவாசிகள் பலர் இம்மைதானத்தை நாளாந்தம் தனது உடல் நலத்துக்காக உபயோகிக்கின்றனர் என்பதையும்

(iii) மாத்தறை மாநகர சபையினால் இம்மைதானத்தை இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்திற்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்விளையாட்டு மைதானம் இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்திற்கு விற்பனை செய்யாவிட்டால் இப்பிரதேச மக்களுக்கு பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுமென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) அவ்வாறாயின், இவ்விளையாட்டு மைதானம் விற்பனை செய்யப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4790/ '14

10.

கௌரவ அசோக் அபேசிங்க,— சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடைவளர்ப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராமிய முதியோர் குழுக்களை நிறுவுவதற்கான முறையியலொன்று நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

(ii) இற்றைவரை நிறுவப்பட்டுள்ள கிராமிய முதியோர் குழுக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) குருநாகல் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள கிராமிய முதியோர் குழுக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கிராமிய முதியோர் குழுக்களுக்கு அரசாங்கத்தினால் நிதி ஏற்பாடுகள் மற்றும் பௌதீக வளங்கள் வழங்கப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5434/'14

11.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் உற்பத்திகளுடன் தொடர்புடைய பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ட்ரெட் லங்கா தனியார் கம்பெனிக்கு ஒப்பந்தமொன்றை வழங்கியதா;

(ii) ஆமெனில் அந்த ஒப்பந்தத்தின் பெறுமதி எவ்வளவு;

(iii) மேற்சொல்லப்பட்ட ஒப்பந்தத்தை மேற்படி நிறுவனத்திற்கு வழங்கும் போது அங்கீகரிக்கப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா;

(iv) கேள்விப்பத்திரம் கோரல் மேற்கொள்ளப்பட்டதாயின் விலைமனுக்களைச் சமர்ப்பித்திருந்த நிறுவனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விலை மனுக்கள் யாவை;

(v) மேற்படி விலைமனுக் கோரல்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எப்பிரிவின், எவ்வுத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டது;

(vi) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் அவ்வாறு செயலாற்றுவதற்கு இவர்களுக்கு சட்ட ரீதியான அதிகாரம் உண்டா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி அ (i) இல் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தம் கேள்விப்பத்திரம் கோராமல் வழங்கப்பட்டிருப்பின், அந்த நிறுவனம் தெரிவுசெய்யப்பட்ட அடிப்படை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5691/ '15

12.

கௌரவ அனுர திஸாநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த மூன்று வருடங்களில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மொத்த எத்தனோல் தொகை வருடாந்த ரீதியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மதுபான உற்பத்தி மற்றும் நறுமணப் பொருட்கள் உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்படும் எத்தனோலுக்காக அறவிடப்படும் வரி எவ்வளவு என்பதையும்;

(iii) கடந்த 03 வருடங்களில் இறக்குமதி செய்யப்பட்ட எத்தனோலின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானம் மற்றும் நறுமணப் பொருட்களின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) மதுபான உற்பத்தி மற்றும் வாசனைப் பொருட்கள் உற்பத்திக்கென எத்தனோல் இறக்குமதி செய்த கம்பனிகளின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4791/ '14

13.

கௌரவ அசோக் அபேசிங்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருணாகல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முன் சிறுவர் பராய அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) குருணாகல் மாவட்டத்தில் உள்ள முன் சிறுவர் பராய அபிவிருத்தி நிலைய பெண் நிர்வாகிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி பெண் நிர்வாகிகளுக்கு கொடுப்பனவு வழங்குகின்ற ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4821/ '13

14.

கௌரவ புத்திக பதிரண,— சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டையில் நடைபெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கனிஷ்ட ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்காக (Junior Asian Games) மேற்கொள்ளப்படுகின்ற புதிய நிர்மாணிப்புகள் மற்றும் மறுசீரமைப்புக்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணிப்புகள் மற்றும் மறுசீரமைப்புகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்த செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்ட நிர்மாண ஒப்பந்தத்துக்கு விண்ணப்பித்த நிறுவனங்களின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் ஆகியவற்றை வெவ்வேறாக அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே (ஆ)வில் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களில் நிர்மாண வேலைக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனம் யாதென்பதையும்;

(ii) இந்நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5435/ '14

15.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 சனவரி தொடக்கம் யூன் வரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் உள்நாட்டு வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட தார் பீப்பாய்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இந்த தார் தொகையை கொள்வனவு செய்வதற்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இந்த தார் பீப்பாய்கள் அனைத்தும் சந்தைப்படுத்துவதற்குப் பொருத்தமான நிலையில் காணப்பட்டதா என்பதையும்;

(iv) இன்றேல் சந்தைப்படுத்துவதற்குப் பொருத்தமான நிலையில் காணப்பட்ட தார் பீப்பாய்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) இந்த தார் பீப்பாய்கள் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்ற இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே குறிப்பிட்ட தார் பீப்பாய்களை வழங்கிய நிறுவனத்தை தெரிவு செய்கையில் கடைப்பிடிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையியல் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2013 ஆம் ஆண்டில் சனவரி தொடக்கம் திசெம்பர் வரை தார் பீப்பாய்களை விற்பனை செய்தல் தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இதுவரை அறவிடப்பட வேண்டியுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அறவிடப்பட வேண்டியுள்ள இப் பணத் தொகை ஒவ்வொரு நிறுவனத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2015 மாச்சு 17) , — "2013 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ், நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 02 ஆம் திகதிய 1900/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 2.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.12.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

மின்வலு, எரிசக்தி அமைச்சர்.— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, சக்தி அமைச்சரால் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் பேரில் மின்சார (அனுமதிப்பத்திரம் தொடர்பில் விண்ணப்பித்தலும் விலக்களிப்பும்) தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 10 ஆம் திகதிய, 1883/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

உள்நாட்டு போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

காணி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 11.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

12.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

17.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.